# மெட்ரோ ரயில் நிலையத்தில், 'லைப் - 2.0' நிகழ்ச்சி

சென்னை, நவ. 26–

உடல்உறுப்பு தானத்தை ஊக்கப்படுத்த, மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில் நடந்த, 'லைப் – 2.0' நிகழ்ச்சியில், 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், 'மோகன்' அறக்கட்டளையும் இணைந்து, உடல் உறுப்பு தானத்தை ஊக்கப்படுத்தும் விதமாக, 'லைப் 2.0' என்ற நிகழ்ச்சியை, நேற்று முன்தினம் மாலை, வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் நடத்தியது.





வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த, ஓவியப் போட்டியில் பங்கேற்ற மாணவர்கள்.

இந்நிகழ்ச்சியில், ஓவியம், கார்ட்டூன் உட்பட, உடல் உறுப்பு தானத்தை மையப்படுத்தி, பல்வேறு போட்டிகள் நடந்தன.

இந்த போட்டிகளில், சென்னையில் உள்ள, 12 பள்ளிகள் மற்றும் மூன்று கல்லூரிகளில் இருந்து, 200 மாணவர்கள் பங்கேற்றனர்.

இந்த போட்டிகளில், வெற்றி பெற்று, முதல், மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு, மெட்ரோ ரயில் நிர்வாகம் பரிசு வழங்கியது.